# பௌத்த வழிபாட்டில் சமன் தெய்வம் - இரத்தினபுரி சமன் தேவாலயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

# Saman Deity in Buddhist Cult – A study based on Ratnapura Saman Devalaya

**பா. சர்மிளாதேவி** / B. Sharmiladevi[1]
**கௌரி லக்சுமிகாந்தன்** / Gowry Luxmykanthan[2]

Date of submission: 2024-07-02
Date of acceptance: 2024-07-15
Date of Publication: 2024-07-30
Corresponding author's Name: Gowry Luxmykanthan
Email: gowryl@esn.ac.lk

**Abstract**

Before the introduction of Buddhism to ancient Sri Lanka, the indigenous population practiced Yaksha and Naga worship alongside Hinduism and Jainism. Despite the widespread adoption of Buddhism, some pre-existing cults persisted, often blending with Buddhist and Hindu practices. This study investigates the influence of Saman worship among Buddhists, with a focus on the Sabaragamuwa Saman Devalaya. Utilizing archaeological evidence and historical analysis, this research aims to uncover the integration of ancient folk traditions with Buddhist practices. The Sabaragamuwa Maha Saman temple, a significant historical site, is central to this study. It serves both as a shrine to Saman and as a Buddhist temple, where rituals are performed in a hybrid manner combining Buddhist and traditional practices. In Sabaragamuwa, community members often seek the deity's blessings before undertaking significant ventures, reflecting the continued importance of Saman worship in local customs. This study employs a historical research methodology, systematically analyzing archaeological and literary sources to reveal the unique and enduring nature of Saman worship within the context of Sri Lankan Buddhism. It demonstrates how ancient worship practices have been preserved and adapted within the framework of Buddhist rituals, highlighting the complex interplay between traditional and Buddhist elements in Sri Lankan religious practice.

**Keywords:** Saman, Buddhism, Basnayaka Nilame, Devalaya, Folk Traditions, Archaeological Evidence

[1]The author is a Research Student in the Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. sharmilakshi@yahoo.com

[2]The author is a Senior Lecturer in the Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. gowryl@esn.ac.lk https://orcid.org/0009-0004-0362-4529

## அறிமுகம்

பௌத்தம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னரே யக்ஷ, நாக வழிபாடுகளுடன் இந்து சமயம், சமணம் முதலானவை இங்கு பூர்வ குடிகளால் பின்பற்றப்பட்டமைக்கான சான்றுகள் மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்களிலும், தொல்லியற் சான்றுகளிலும் காணப்படுகின்றன. ஆயினும் அரசர்களது ஆதரவுடன் அறிமுகமான பௌத்தத்திற்கு ஈடுகொடுக்க முடியாத பல வழிபாட்டு நெறிகள் மறைந்துவிட்டபோதிலும், சில பௌத்தம் மற்றும் வைதீக சமயங்களுடன் கலந்து வலுவிழந்தன எனலாம்.

இலங்கையின் ஆதிமக்களான இயக்கர்கள் இயற்கை வழிபாட்டையும், நாகர்கள் நாக வழிபாட்டையும் சிவ வழிபாட்டையும் பின்பற்றினர். மகாவம்சம் தரும் தகவல்களுக்கு இணங்க பௌத்த சமயம் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, இயக்கர், நாகர் என்போரது வழிபாட்டு முறைகளுடன், மரவழிபாடு, லிங்கவழிபாடு, மற்றும் ஜைனம், வைதீகம் ஆகிய சமயக்கருத்துகள் காணப்பட்டன. உயிரற்ற பொருட்களுக்கு உயிர்த்தன்மை கொடுத்து வழிபடல், குலமரபு சின்னங்களை வழிபடல் என்பன இக்காலத்தில் காணப்பட்டன (கிருஸ்ணராசா, 2012, பக்.184).

இலங்கை மக்கள் பௌத்தத்தை தழுவ முன்னர் வெஸ்ஸவண (M.V X:88-89), (M.V XXV:87)› சித்தராஜ (M.V X:85), பச்சிமராஜினி (M.V X:86), காளவேல (M.V X:84), மகேஜ (M.V XVII:30), கம்மாரதேவ (M.V V:84), புரதேவ (M.V X:87), சுமண முதலான பல யக்ஷ தெய்வங்ளைப் வழிபட்டமை பற்றிய சான்றுகள் மகாவம்சத்தில் உண்டு. இதுபற்றி ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதான சிங்கள மக்கள் பௌத்தத்தைத் தழுவ முன்னர் இக்கடவுளர்களை அறிந்திருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார் (Paranawitana, 1929). இந்தியாவைப் போன்று ஈழத்தின் ஆதிக்குடிகளாகிய ஒஸ்ரலொயிட் இனமக்களே இவ்வழிபாட்டிற்குரியவர்கள் என்பதனை பாளி நூல்களின் செய்திகள் வெளிக்காட்டுகின்றன. கௌதம புத்தரின் இலங்கை விஜயம் மற்றும் பண்டுகாபயன் பற்றிக் குறிப்பிடுகின்ற பகுதிகளில் இத்தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் மகாவம்சத்தில் விரவிக் காணப்படுகின்றன.

இலங்கையரின் வழிபாட்டு முறைகளில் யக்ஷ, நாக மரபுகள் கலந்தமையை ஈழத்துச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. சாதாரண சிங்கள மக்களின் வழிபாட்டில் பண்டைய காலம் முதலாக இருவகையான வழிபாட்டு நெறிகள் காணப்படுகின்றன. ஒன்று, பௌத்த தாதுகோபுரத்தை மையமாகக் கொண்ட வழிபாடு. மற்றையது நாட்டார் வழிபாடாக புராதன காலம் முதலாக அவர்களிடையே காணப்படும் வழிபாட்டு நெறியாகும். பௌத்தத்தை ஏற்றுக் கொண்டபோதிலும் தமது பழைய நம்பிக்கைகளை மறவாத இலங்கையர் பௌத்த சமயத்துடன் இணைந்தவகையில் அவற்றை இன்றுவரை பேணுகின்றமை குறிப்பிடத்தக்கது (சிற்றம்பலம், 1996, பக்.01-70). இலங்கையின் மத்திய காலப்பகுதியில் உப்புல்வன்ன, சமன், கஜரகம தெய்யோ மற்றும் விபீசானா ஆகியோர் தீவின் பாதுகாவலராக வணங்கப்பட்டனர் என பெரேரா உள்ளிட்டோர் கூறுகின்றனர் (1971, பக்.78). இவற்றில் சமன் தெய்வ வழிபாடு முக்கியம் வாய்ந்ததாகும்.

இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படும் சமன் தேவாலயங்களில் உள்ள வழிபாடானது, தற்காலத்தில் பௌத்த வழிபாடுகளுடன் இணைந்தவாறு காணப்படுகின்றபோதிலும் அது தனித்துவமான வழிபாடு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஸ்ரீபாதமலையின் முதன்மைத் தெய்வமான சமன் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட சன்னதிகளே இக்கோயில்களாகும். இவ்வழிபாட்டின் வரலாறு புத்தரின் இலங்கை வருகைக்கு முன்னரே ஆரம்பமாகின்றது (M.V I:33). புத்தர் இலங்கைக்கு வந்தமைக்குத் தொல்லியல், வரலாற்று ஆதாரங்கள் காணப்படாத நிலையில், பௌத்த சமயத்தின் இருக்கையை இலங்கையில் நிலைநிறுத்தும் நோக்கில் பிற்காலத்தில் சங்கத்தாரால் உருவாக்கப்பட்ட புனைவுகளில் ஒன்றாகவே இதனைக் கருதலாம். எனினும், இக்கதையினூடாக சமன் தெய்வமும், அவரது வழிபாட்டிடமான சிவனொளிபாத மலையும் புராதன இலங்கையில் மிகுந்த முக்கியத்துவம்

பெற்றிருந்தது என்பது புலனாகின்றது.

### நோக்கம்

பௌத்த மக்கள் மத்தியில் காணப்படுகின்ற வழிபாடான சமன் வழிபாடு இம்மக்களிடையில் எத்தகைய செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை சபரகமுவ சமன் தேவாலயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

### தரவுத் தேடலும் ஆய்வு முறையியலும்

இவ்வாய்வின் முதலாம் நிலைத்தரவுகள் களஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளாகும். குறித்த பிரதேசத்திலுள்ள கல்வெட்டுக்கள், தொல்லியற் சின்னங்கள், பண்பாட்டை பிரதிபலிக்கும் பொருட்கள் என்பவை களஆய்வினூடாக கண்டறியப்பட்டன. அத்துடன் குறித்த பிரதேசத்தின் கிராமத் தலைவர்கள், பிரதேசவாசிகள், தொல்லியல் துறையில் ஈடுபாடு கொண்டோர் முதலானோருடன் நேரடியாகக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் என்பனவும் முதன்மைச் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், தொல்லியல் திணைக்கள வெளியீகள், இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் முதலானவை பயன்படுத்தப் பட்டுள்ளன.

தொல்லியல், இலக்கியத் தரவுகளைச் சேகரித்து, அதனை முறைப்படி ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் புதிய விடயங்களைக் கண்டறிகின்ற வரலாற்றியல் ஆய்வு அணுகுமுறை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### இலங்கையில் சமண் வழிபாடு

சுமண அல்லது சமன் தெய்வம் இலங்கைத் தீவின் நான்கு எல்லைகளிலொன்றின் பாதுகாவலராகவும், புத்த சாசனத்தின் பாதுகாவலராகவும் பௌத்தர்களால் வழிபடப்படுகின்றார். சிவனொளிபாதமலை, மஹியங்கனை, பலாங்கொடைக்கு அருகிலுள்ள பொல்தும்பே, தெரணியகல, சபரகமுவ சமன் தேவாலயம் என்பவை சமனுக்குரிய வழிபாட்டிடங்களாகும். இவற்றில் சிவனொளிபாத மலையைப் போன்று சபரகமுவ சமன் தேவாலயமும் பௌத்த மக்களால் மட்டுமின்றி இந்துக்களாலும் வழிபடப்படுகின்றமைச் சிறப்பிற்குரியதாகும். இவர் தேவ குலத்தை சேர்ந்தவர் என்ற நம்பிக்கை முறைகளும் வழிபாட்டு அம்சங்களும் இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் அம்சங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

சமன் என்ற பெயரின் அர்த்தம் ‘உதயமாகும் காலை சூரியன்’ என்பதாகும். இவர் மகுடம் சூட்டப்பட்டு, வலது கையில் தாமரை மலரைப் பிடித்து, ஒரு வெள்ளை யானையுடன் சித்தரிக்கப்படுகிறார். இலங்கைக்கான புத்தரின் முதல் வருகையின் போது மஹியங்கணையில் புத்தரைச் சுற்றிக் கூடியிருந்தவர்களில் தேவகுமாரனான சுமணவும் இருந்தார். கௌதம புத்தரின் கோட்பாட்டால் ஈர்க்கப்பட்டு, தம்மத்தைப் பின்பற்றி, அவரது புனித பிரசங்கத்தைக் கேட்டு சுமண உயர்ந்த அரிய நிலையை அடைந்தார் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. புத்தரின் சிகையை தங்க கலசத்தில் பெற்ற இவர் இங்கு தூபம் ஒன்றை நிறுவியதாகவும் பின்னர் புத்தரின் காறை எலும்பைப் பெற்று 12 முழு உயரமுள்ள ஸ்தூபம் அமைத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார் என இந்நூல் மேலும் கூறுகிறது *(M.V I:33-39)*.

மகாவம்சம் கூறுகின்றவற்றை நோக்குகின்றபோது, தனித்துவமாக இருந்த சுமண அல்லது சமன் தெய்வ வழிபாட்டு மரபு பௌத்த சமயத்தின் அறிமுகத்தின் பின்னர் பௌத்த கோட்பாட்டால் ஈர்க்கப்பட்டு, அதனுடன் கலந்துவிட்ட நிலையைக் காணமுடிகின்றது. நான்காம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட தீபவம்சத்தில் புத்தர் சிவனொளிபாதத்திற்கு வருகை தந்தமை பற்றிய எவ்வித குறிப்பும் இல்லை. ஆனால் ஆறாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட மகாவம்சத்தில் புத்தரின் சிவனொளிபாத மலைமீதான வருகை குறிப்பிடப்படுகின்றது. எனவே, சமகாலப்பகுதியில் இம்மலைப்பகுதி முக்கியத்துவமிக்க வழிபாட்டிடமாக எழுச்சி பெற்றிருந்தது எனக் கருதமுடிகின்றது. எனவே, இக்காலத்திற்கு முன்னரே பௌத்த, சமன்

வழிபாட்டுக் கலப்பு நடைபெற்றிருத்தல் கூடும் எனக் கருதலாம். மஹியங்கனையிலும் சமன் வழிபாடு பிரசித்திபெற்று காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சபரகமுவ சமன் தேவாலயம்

சமன் கடவுளுக்கான ஆலயம் சபரகமுவவில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டது (Jayantha Vijerethna, 2003, பக்.87). பிற்காலத்தில் தேவகுலத்தைச் சேர்ந்தவர்கள் சப்ரகமுவவில் கோயில் அமைத்தனர் என்பது ஐதிகம். வரலாற்று மூலாதாரங்களின் அடிப்படையில் நோக்கும்பொழுது மகாசமன் தேவாலயமானது இலங்கையின் தம்பதெனியா இராச்சியத்தினை ஆண்ட இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் (கி. பி. 1270) ஆட்சிகாலத்தில் பிரதம அமைச்சராக இருந்த 'ஆர்ய காமதேவ' என்பவரால் கற்கோவிலாக அமைக்கப்பட்டது எனலாம் (Abeyawardana, 2003, பக்.103). சபரகமுவ பகுதியில் விலையுயர்ந்த மாணிக்கக்கற்கள் இருப்பதைக் கேள்வியுற்ற மன்னன் அதனை அகழ்ந்து அரச திறைசேரியில் சேமிக்கும் பொறுப்பை அப்பிரதம மந்திரிக்கு வழங்கினான். இப்பணிக்காக அவர் முதன்முதலில் அரசனின் பெயரால் நேர்த்தியை வைத்தார். தனது பணி சிறப்பாக இடம்பெற்றால், இரண்டு அடுக்குகளைக்கொண்ட தேவாலயத்தினை அமைப்பதே அந்த நேர்த்தியாகும். மாணிக்கம் அகழ்வு சிறப்பாக இடம்பெற்று, விலைமதிப்பான கற்கள் கிடைத்ததாக இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு தகவல் அனுப்பப்பட்டதை அடுத்து, மன்னன் மகிழ்ச்சியில் சமன் தேவாலயத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்தான். சமன் கடவுளுக்காக மூன்று மாடி தேவாலயத்தைக் கட்டியதுடன், அதனை பராமரிப்பதற்காக நகைகள், கிராமங்கள் மற்றும் தொழிலாளர் வசதி என்பவற்றையும் செய்துக்கொடுத்தான். இச்செய்தியை 'சமன் சிரித' எனும் நூலின் 140 ஆவது செய்யுள் குறிப்பிடுகிறது (Jayantha Vijerethna, 2003, பக்.84).

சமன் சிரித என்ற வரலாற்று நூலின் குறிப்பின்படி சமன் தேவாலயத்தில் பௌத்த விகாரை அமைக்கப்படவில்லை என்பது உறுதியாகின்றது. தேவாலயத்தின் கீழ்மாடியில் வழிபாட்டிடம் ஒன்றினை அமைத்து அதன் கூரைக்கு தங்க முலாமிட்டதாகவும், ஆலயத்தின் பாதுகாப்புக்காக காவலர்களையும், பூசைப் பொருட்களையும் பெற்றுக்கொடுப்பதற்காக சேவையாளர்களையும் அரசர் நியமித்தார் என அறிய முடிகின்றது. மூன்று மாடிகளைக் கொண்ட வழிபாட்டிடத்தில் சமன் கடவுளுக்கு பூசைகளும் இடம்பெற்றன.

சமன் தேவாலயத்தினை அமைத்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன், அதிபுண்ணிய வணக்கஸ்தலமான ஸ்ரீபாதவில் அமைந்துள்ள சமன் தேவாலயத்தில் இருந்து தெய்வச்சிலை மற்றும் ஆபரணங்களைப் பெற்று சபரகமுவ சமன் தேவாலத்திற்கு வழங்கினான். அத்துடன் இத்தேவாலயத்தின் பிரதான பூசகர் பதவியினை 'எத்ஓய கப்புராலே' என்பவருக்கு வழங்கினார். இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் மந்திரியான ஆர்யகாமதேவ என்பவர், அரசனின் வேண்டுகோளின்படி கம்பளைக்குச் சென்று சமன் தெய்வத்தின் முற்றுமுழுதுமான சிலை ஒன்றினை செய்து, அச்சிலையினை ஆபரணங்களால் அலங்கரித்து, கம்பளையிலிருந்து ஊர்வலமாக ஸ்ரீபாத வணக்கஸ்த்தலத்தில் வைத்து, மீண்டும் சபரகமுவவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சமன் தேவாலயத்திற்குக் கொண்டுவந்து வைத்ததாக கூறப்படுகின்றது.

சமன் தேவாலயம் அநுராதபுர அரசன் வலகம்பா மன்னனுடன் தொடர்புப்படுத்தப்படுகின்ற போதிலும் இக்கருத்திற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை. கி.பி. 1618 போர்த்துக்கேயரின் படையெடுப்பூடாக சப்பிரகமுவ பிரதேசம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாலயம் அழிக்கப்பட்டு தேவாலயமொன்று அமைக்கப்பட்டது. இரண்டாம் இராஜசிங்கனுக்கும் போர்த்துக்கேயருக்கும் (1629 – 1687) இடம்பெற்ற தொடர்ச்சியான போர்களின் பின் கி. பி. 1665 இல் இப்பகுதி மீண்டும் அரசனால் கைப்பற்றப்பட்டது. மன்னன் 17 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க தேவாலயத்தை அழித்து சமன் கோயிலைப் புனரமைத்தான். தற்போது காணப்படும் தேவாலயத்தின்

வெளிவளாகம் புதுப்பிக்கப்பட்டு, புதிய கட்டுமானங்கள் அமைக்கப்பட்டாலும் இரண்டாம் இராஜசிங்க மன்னனால் புனரமைப்பட்ட ஆலயப்பகுதி அவ்வாறே காணப்படுவது தனிச்சிறப்பாகும். இவ்வாலயத்தின் பரிபாலன நடவடிக்கைகள் அனைத்தும் பஸ்நாயக்க நிலமேயின் தலைமையில் இடம்பெற்றுவருகின்றது.

### சமன் விகாரையும் பௌத்த நடைமுறையும்

### 1.நிர்வாக நடவடிக்கைகள்

மகா சமன் தேவாலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் யாவும் பஸ்நாயக்க நிலமே என்பவரின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இது பரம்பரையானதாகும். தற்காலத்தில் தேவாலய நிகழ்வுகள் யாவும் பஸ்நாயக்க நிலமேயின் கீழ் இடம்பெற்று வந்தாலும், பௌத்த சமய விவகார அமைச்சின் சட்டங்களுக்கு உட்பட்டு ஆணையாளரின் கீழ் இடம்பெறுகின்றது. அவருக்கு உதவுவதற்கு ஆரம்பத்தில் ரத்னாயக்க, முடன்நாயக்க, வன்னகு மற்றும் மொஹட்டால போன்ற அதிகாரிகள் இருந்தனர். தற்போது இவ்விகாரையின் நிர்வாக விடயங்கள் மேல்வரும் அதிகாரிகளின் உதவியுடன் நடைபெறுகிறது.

1. மொஹொட்டாவரு
2. விதனேவரு
3. செயலாளர்
4. மேற்பார்வையாளர்

ஆலயத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பொறுப்பாக ஒவ்வொருவர் காணப்படுகின்றனர். ரத்னக மொகட்டால ஆபரணங்களுக்கு பொறுப்பானவராகவும், கபடா மொகட்டால என்பவர் களஞ்சிய பொறுப்பாளராகவும் உள்ளார். மேலும் அங்கமுவ மொகட்டால, குருவிட்ட மொகட்டால போன்ற உயர் பதவிகளும் காணப்படுகின்றன. கபடா விதானையார் என களஞ்சிய செயலாளரை அழைக்கின்றனர். இதற்கெல்லாம் கண்காணிப்பாளர் காணப்படுகின்றார்.

கபு நிலய (பூசகர்) என்பவர் சமன் தேவாலயத்தின் பூசை நடவடிக்கைக்கு பொறுப்பாக காணப்படுகின்றார். தேவாலயத்தின் பூசை நிகழ்வுகள் யாவும் கபுராலேயின் கீழ் இடம்பெறுகின்றது. இதை தவிர பத்தன நிலய, அத்தநாயக்க நிலய, பலியக்கார நிலய (கவசங்கள் பொறுப்பு), குட நிலய (குடை பொறுப்பு), சாமர நிலய (சாமர நிலய), உடுவிய நிலய (வெண் துணி), லன்ச நிலய, முருத்த நிலய (சமையலறை பொறுப்பு), பிரித் நிலய (பூசை பொறுப்பு), துரகார நிலய (விறகு பொறுப்பு), வட்டோரு நிலய (கோவை தயாரிப்பு), முரே ஏனயா நிலய (காவல்) முதலான பதவிகளும் காணப்படுகின்றன. பொதுவாக பௌத்த விகாரைகளில் காணப்படுகின்றவாறான நிர்வாக முறையாகவே காணப்படுகின்றது. கபுராலேய (கப்புறாளை) பூசை செய்கின்ற முறையானது பழமையானதும், புத்த வழிபாட்டு மரபுகளிலிருந்து மாறுபட்டதாகவும் காணப்படுகின்றது. கதிர்காமக் கந்தசுவாமி கோயிலிலும், கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள புராதன கோயில்களிலும் (மண்டூர், வெருகல்) இம்மரபைக் காணமுடிகின்றது. இது புராதன சமன் வழிபாட்டுடன் பௌத்த மரபு கலந்துள்ளமையை வெளிக்காட்டுகின்றது.

### 2. நேர்த்தி வைத்தல்

சமன் தேவாலயங்களில் பௌத்த வணக்கமுறைகள் முக்கியத்துவம் பெறுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. சபரகமுவவில் உள்ள சமன் தேவாலய வளாகத்திலும் பௌத்த விகாரையொன்று அமைந்துள்ளது. சமன் தேவாலயத்திற்கு வழிபாடு செய்ய வரும் பக்தர்கள் முதலில் பௌத்த விகாரைக்குச் சென்று வழிபாடாற்றிய பின்னரே சமன் கோயிலிற்குள் நுழைகின்றனர். பிரதான அமைச்சரான ஆர்யகாமதேவ, சபரகமுவ சமன் தேவாலயத்தினை அமைக்கும் பொழுது அவ்விடத்தில் சபரகமுவ விகாரை என்றதொரு பிரசித்திபெற்ற விகாரை இருந்ததாகவும் சில வாய்மொழிக் கதைகள் காணப்படுகின்றன. தற்காலத்தில் வழிபாடுகளின் போது பௌத்த வழிபாடுகளுக்கு பின்னரே சமன் தெய்வத்திற்கான பூசைகள் மற்றும் வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

இலங்கையில் ஆரம்பகாலத்தில் மக்கள் பாதுகாப்புக் கடவுளாகக் கருதியே சமன் தெய்வத்தை வழிபட்டுள்ளனர். சபரகமுவ

மக்களைப் பொறுத்தவரை சமன் தெய்வத்திடம் அனுமதி கேட்ட பின்னரே சுபகாரியங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் என்பவற்றை மேற்கொள்ளும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக தாம் எதிர்பார்க்கின்ற அல்லது ஆரம்பிக்கும் காரியத்திற்காக பூசை கொடுப்பர்; தமது பிராத்தனைகள் மூலம் அனுமதி பெறுவர்; பின் நேர்த்தி வைப்பர். அதாவது தாம் நினைத்த காரியம் அவ்வாறே நிறைவேறினால் குறிப்பிட்ட நேர்த்தியை (பார) நிறைவேற்றுவதாக வேண்டிக்கொள்கின்றனர். ஏனைய பௌத்தம் விகாரைகளில் இவ்வாறான வழிபாடுகள் பின்பற்றப்படுவது இல்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

நேர்த்தியின்போது வெவ்வேறு விதமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. விசேட பூசையை செய்தல், ஆலயத்திற்கு தேவையான அல்லது விசேடமாக தேவைப்படும் பொருட்களைக் கொடுத்தல், கோயில் யானைக்கான ஆடைகளைக் கொடுத்தல், உணவு தானம் அளித்தல், பிக்குகளுக்கு தானம் வழங்கல், தொழில் ரீதியான இலாபத்தில் ஒரு பங்கை ஆலயத்திற்கு வழங்கல் போன்றனவாகும்.

இரத்தினகற்கள் அகழ்விற்காகவே இங்கு ஆரம்பத்தில் நேர்த்தி வைக்கப்பட்டது. இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் சமன் தெய்வத்திடம் நேர்த்தி வைத்த பின்னரே ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் இரத்தினக்கல் அகழ்வில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பங்கை காணிக்கையாக செலுத்துகின்றனர். அகழ்வின் போதும் சமன் தெய்வத்திற்குரிய பூசைகள் நடைபெற்ற பின்னரே தமது தொழிலைத் தொடங்குவர். இரத்தினகற்கள் கிடைக்கவேண்டும் என விளக்கு, பட்டாடை என்பன நேர்த்தி வைக்கும் வழக்கமும் உள்ளது. மழையின்மை, விவசாயம் பாதிப்பு, பாதுகாப்பான தூர பயணம் போன்ற நிலைகளிலும் பாதுகாப்பு வேண்டி சமன் கடவுளை வழிபடுகின்றனர். விவசாயத்தில் ஈடுபடுவோர் அறுவடையில் ஒரு பங்கை எடுத்து அதனை சமைத்து படையல் இடும் பழக்கம் பின்பற்றப்படுகின்றது (Malathi, 2006, பக்.153).

சபரகமுவ மக்கள் மத்தியில் 'சமன் தெய்யோ கருணாவாய்', 'சமன் தெவி பீட்டாய்'இ 'சமன் தெவியான்ட ஒப்பு வச்சாவ' முதலான சொற்கிரயோகங்களைக் கேட்க முடியும். இதன் கருத்து சமன் தெய்வம் அதனை பார்த்துக்கொள்வார், அவரிடம் விட்டுவிடுங்கள் என்பதாகும். பாதுகாப்பற்ற பயணத்தின் போது இவ்வாறு கூறிக்கொண்டே செல்வதால் சமன் கடவுள் தம்மை பாதுகாப்பார் என்ற நம்பிக்கை இம்மக்களிடம் காணப்படுகின்றது.

### 3. பூசைகள்

சமன் தெய்வத்திற்கென தனித்துவமான வழிபாடுகள் காணப்படுகின்றபோதிலும் தற்காலத்தில் பௌத்த சடங்குகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. சமன் கோயிலில் தினப் பூசைகள் நடைபெறுவதோடு, தை, கார்த்திகை, சித்திரை மாதங்களில் சிறப்பான பூசைகளும், ஆண்டுக்கொருமுறை திருவிழாவும் நடைபெறும்.

சமன் கடவுளுக்கு வழங்கப்படும் உணவு 'முருகதென' அல்லது 'ஹல்மதானம்' எனும் பெயரால் அழைக்கப்படும். சோறு மற்றும் 7 கறி, அதனுடன் அதிரசம் என்பன இவ்வுணவில் இருக்கும். அதிரசம் செய்வதற்கு அப்பொழுதே மாவு இடித்து பிசைந்து செய்வர். ஹல்மதானத்தை இறைவனுக்கு காவல் செய்பவர் கொண்டு வருவார். அவற்றை பந்தனரால பாரம் எடுத்து 'கற்புகரிடம்' கொடுப்பார். கற்புகர் மூலமே இறைவனுக்கு படைக்கப்படும். இதன் பின்னரே பூசை செய்யப்படும்.

தினந்தோறும் ஆறுகால பூசைகள் நடைபெறும். தினந்தோறும் அதிகாலை 4.30 க்கும் 5.00க்கும் இடையில் நடைபெறுவது அதிகாலை பூசை ஆகும். இது சமன் கடவுளுக்கு செய்யும் ஒலிப் பூசையாகும். தவில், தம்பட்டம், எக்காளம், சங்கு போன்றவை இப்பூசைக்காக பயன்படுத்தப்படுகின்றன. சமன் கடவுளுக்கு ஹில்பிச்சை வைப்பதே 'இல்தானம்'; என்று அழைக்கப்படுகின்றது. அதில் கடவுளின் முகத்தை கழுவுவதற்கு தண்ணீர் வழங்குதல், பூக்களை கொண்டு பூசை செய்தல், தெய்வங்களுக்கும் கோயிலுக்கும் தூபம்

காட்டுவது போன்ற பகுதிகள் உள்ளன. அதாவது கடவுளை துயில் எழுப்புகின்ற மரபு இந்துக் கடவுளரைப் போன்று சமனுக்கும் பின்பற்றப்படுகின்றது.

**4. மஹா பெரஹரா (திருவிழா)**

இரத்தினபுரி சப்ரகமுவ சமன் கோயிலின் மகா ஊர்வலம் ஆண்டுக்கொருமுறை பெரஹரா என்றவாறு நடைபெறும். 15 நாட்கள் இடம்பெறும் பெரஹரா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கோட்டை இராச்சிய மன்னனான ஆறாம் பராக்கிரமபாகு பெரஹரா நடைபெறுகின்ற முறையினைத் தொடங்கி வைத்தார். எசல பெரஹரா என்ற பௌத்தர்களின் திருவிழா முறையை இங்கு இரண்டாம் இராஜசிங்க மன்னனே தொடங்கி வைத்தார். அக்காலக்கட்டத்தில் இருந்து வருடத்தில் ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை ஒரு பாரம்பரிய விழாவாக நடாத்தப்படுகிறது. இம்மாதங்களில் எசல பெரஹரா கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த விழா இலங்கையின் மிகப் பழமையானதும் முன்னோடியாகவும் இருக்கலாம். சிங்களவர்கள் மட்டுமன்றி பிற இனத்தவர்களும் இதில் கலந்து கொள்கின்றமையானது இன ஒற்றுமையை ஏற்படுத்துவதாக உள்ளது.

மகா பெரஹரா ஐந்து பகுதிகளாக நடைபெறும். தலதா பெரஹரா, பத்தினி பெரஹரா, பிசோ தேவி பெரஹரா, எசல பெரஹரா, குமார தேவி பெரஹரா என்பனவாகும். இதில் எசல பெரஹரா மூன்று பகுதிகளை கொண்டுள்ளது. அதன்படி முதலில் நடத்தப்படுவதே தேவெலே பெரஹெரா, வதாதபெரஹெரா பிறகு இறுதியாக கும்பலா பெரஹெரா ஆகும். கும்பலா பெரஹெரா மேல் முற்றத்தை சுற்றி நடைபெறும். ஒரு துப்பாக்கி சூட்டின் மூலம் ஊர்வலத்தை தொடங்கி வைப்பது வழக்கம், 5 நாட்கள் மாலை நேரங்களில் மேல் முற்றத்தைச் சுற்றி ஊர்வலம் வரும்.

சமன் கோயிலில் ஊர்வலம் நடைபெறும் நாளில் தெல்கமுவ விகாரையில் விசேட ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்படும். ஸ்ரீ தலதா கடவுளின் ஊர்வலம் குரவிட்ட தெல்கமுவ ரஜமகாவிகாரையிலிருந்து (களு கங்கையின் கரையில் அமைந்துள்ளது) இரத்தினபுரியின் மகாசமன் கோயிலுக்கு ஊர்வலமாக வரும். அதன் பின்னர் சபரகமுவ சமன் கோயில் பெரஹரா தலதா பெரஹரா உடன் சேர்ந்து கொள்ளும். முதலாம் விமலதர்மசூரிய மன்னன் ஸ்ரீதலதா கடவுளை கண்டிக்கு கொண்டு செல்லும் வரை 42 வருட காலமாக தலதா பெரஹரா தடையின்றி நடைபெற்று வந்தது.

பெரஹராவின் முதல் கட்டத்தில் பிரித்விழா நடைபெறும். பிரித் ஓதி வழிபாடுகள் ஆரம்பிக்கின்றன. கப் சிட்டுவீமா என திருவிழாவின் ஆரம்பத்தில் மர கோபுரம் ஒன்று நடப்படுகின்றது. இதன் முடிவில் தியா கபீமா என கூறப்படும் நீர் வெட்டு விழாவும் இடம்பெறுகின்றது. இந்நீர்வெட்டு விழாவுடன் திருவிழா நிறைவு பெறும். இது இரத்தினபுரியில் அமைந்துள்ள களுகங்கை நதியில் நடைபெறுகின்றன. 13 நாட்கள் இடம் பெறும் இத்திருவிழா சன்னதியின் தலைமை பதவியில் இருக்கும் பஸ்நாயக்க நிலமேயின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றன.

மகா சமன் கோயிலின் எசல பெரஹரா பண்டைய இராஜ நீதிக்கு ஏற்பவே நடைபெறுகின்றது. இப்பெரஹரா சமன் கோயில் கடவுளுக்கு நன்றி பயக்கும் நோக்கத்தோடு நடாத்தப்படுகின்றது. மற்றும் சபரகமுவவாசிகளும் முழு நாடும் சௌபாக்கியங்களை பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகஸ்ட் மாதம் முடிவடைவதற்கு முன்னரே எசல பெரஹரா நடைபெறுவது சம்பிரதாயமாக காணப்படுகின்றது.

எசல கொண்டாடத்திற்கு பஸ்நாயக்க நிலமே பொறுப்பாக இருப்பார். அவர் ‘நெகத் ரால’, ‘எதுலு கட்டலே’, ‘பிட கட்டலே’ ஆகிய அதிகாரிகளுக்கு எசல கொண்டாட்டத்திற்கான வேலைகளைப் பிரித்துக் கொடுப்பார். இதற்கிடையில் விகாரை வெள்ளையடித்து சுத்தம் செய்யப்படும். கொடிமர ஊர்வலத்திற்கு பொறுப்பாக இருப்பவர் ‘கப் ஊன்றும் ரால’ ஆவார். இவர் முதல் நாள் இரவே தனியாகச் சென்று ஒரு பால் மரத்தை வெட்டி அதனை

சிம்மாசன மண்டபத்தில் வைத்து விடுவார். மறுநாள் அந்த மரத்தையும் கொடிமரத்தையும் கோசத்ததுடன் கொடிமரம் ஊன்றும் இடத்திற்கு கொண்டு வருவார்கள்.

இதற்கிடையில் கோயிலின் உள்ளே இன்னொரு சிறிய ஊர்வலம் ஏற்பாடு செய்யப்படும். சமன் கடவுளின் ஆபரணங்கள் அவருக்குரிய பல்லக்கிலும் பத்தினி (கண்ணகி) கடவுளின் ஆபரணங்கள் பத்தினி தெய்வ பல்லக்கிலும் வைத்து விகாரையில் உள்ளவர்கள் ஒரு பெரஹரா போல சாந்தி மண்டபத்தினுள் கொண்டு செல்வார்கள். கொடிமரம் ஊன்றும் ராலவின் ஊர்வலம் ஏற்கனவே அவ்விடத்திற்கு வந்து நிற்கும். இங்கே அனைவரும் ஒன்றாக முன்பு போலவே முற்றத்தை சுற்றி நடப்பார்கள். பத்தினி கோயிலுக்கு முன்னால் அனைவரும் இணைவார்கள். புதிய மண் பானைகளையும் சுமந்து ஊர்வலத்தின் முன் செல்வார்கள்.

நான்காவது பெரஹரா பண்டைய கிணற்றுக்கு அருகில் நடைபெறும். சுபநேரத்தில் கிணற்றுக்கு அருகில் கொடி மரத்தை நாட்டுவார்கள். மரத்தை ஊன்றிய பிறகு பெரஹரா மீண்டும் விகாரைக்கு வரும். கொடிமரம் நாட்டப்பட்ட நாளிலிருந்து பிராத்தனை நிருத்தப்பட்டு ஊர்வலத்தில் இரண்டாவது நாளில் மீண்டும் தொடங்கும். இவ்வாறு 5 பெரஹெரா ஒன்றன்பின் ஒன்றாக வீதி ஊர்வலம் வருவதால் சபரகமுவ மக்கள் சமன்கோயில் பெரஹராவை ‘மகா பெரஹரா’ என்று அழைக்கின்றனர். ரா சுபநேரத்தில் ஆரம்பமாகும் இப்பெரஹரா பண்டைய சடங்கு சம்பிரதாயங்களுக்கு ஏற்பவே தற்பொழுதும் நடைபெறுகின்றது.

நல்ல நேரம் நெருங்கும்போது பாரம்பரிய உடை மற்றும் அணிகலன்களுடன் பஸ்நாயக்க நிலமே மற்றும் அவரது பரிவாரங்கள் மேல் முற்றத்தில் நுழைவார்கள். அதுவரையில் கோயிலின் உள்ளே கடவுளுக்கான சேவைகள் நடைபெறும். அதன் பின்னர் ஏவிசி பூசை அதனைத் தொடர்ந்து இரண்டு பிக்குகள் மூலம் பிரித் கோலமிடப்படும். இந்த சந்தர்ப்பத்தில் பிரதானி, துறவிகள் நினைவுச்சின்ன கவசத்தை சுமந்து சென்று தலைமைக் கப்புகர் தலையில் வைப்பர். இவ்வாறு இந்த நினைவுச் சின்னங்களை பிரதீட்சை செய்யும் போது பொரி மற்றும் பால் தெளிப்பது வழக்கமாகும். அதன் பின்னர் தலைமைத் தேரர் கலசத்தை ஏற்றுக்கொள்வார். இக்கலசத்தை யானை மீது வைத்து ஊர்வலமாக கொண்டு செல்வர்.

சுபநேரம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தப் பெரஹராவில் பங்குபற்றும் அனைத்து நடன கலைஞர்களும் தயாராவார்கள். சிலர் சுபநேரம் வரும் வரை பஸ்நாயக்கநிலமயின் முன் ஒரு வட்டமாக ஒன்றிணைவார்கள். இதனை சிறப்பு அழைப்பு விடுத்த பிரபுக்கள் மற்றும் பெரஹரா கண்டுகளிக்க வந்தோர் அனைவரும் பார்வையிடுவார்கள். இதற்கு இடைப்பட்ட நேரத்தில் பங்குகொள்ளும் யானைகளை பாகன் அலங்கரிப்பார்.

இப்பெரஹராவில் உடரட மற்றும் பஹதரட நடனம், யானைகளின் ஊர்வலம், பொய்க்கால் கொண்ட பொம்மை என பலவற்றை காணலாம். நடனத்தில் அணிந்திருக்கும் ஆடை சமன் கடவுளுடையதை ஒத்ததாகக் காணப்படும். கும்பல் அல்லது டெவெல் பெரஹோராஸ் என்ற முறையில் களியாட்டங்களை போல நடனங்கள் இடம்பெறுகின்றன. இதனை தொடர்ந்து பிரதான ஊர்வலம் நடைபெறுகின்றது. இந்த ஊர்வலத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லின கலாசார நடனங்கள் ஆடப்படும்.

### 5. முகமூடியும் பொம்மைகளும்

சபரகமுவ மகா சமன் தேவாலயத்தின் வண்ணமயமான போட்டியில் மகா பாம்பா கோலம் என இது அழைக்கப்படுகின்றது. மகா பாம்பாவின் பிரமாண்டமானது 15 அடி உயரமுள்ளது. இரண்டு முகம் கொண்ட உருவம் ஒருபுறம் அமைதியான முகமும், மறுபுறம் ஐந்து நாகப்பாம்புகள் கொண்ட பேட்டைக் கொண்ட ஒரு பயங்கரமான பேய் முகமும் காணப்படும். கோபத்தில் ஒரு அரக்கனைப் போலவும், நல்லொழுக்கமுள்ள தெய்வத்தைப் போல இனிமையாகவும் கருதப்பட்ட முதலாம் இராஜசிங்க மன்னனின் தன்மையை இது சித்தரிக்கிறது என்று நம்பப்படுகிறது. இது இரண்டாம் இராஜசிங்க மன்னரால் அறிமுகப்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

தற்போதைய பஸ்நாயக்க நிலமே, தேவாலயத்தின் சாதாரண பாதுகாவலர், மிகாரா ஜெயசுந்தேராவின் அனுமதியுடனே மகா பாம்பா உருவத்தை கைவினைஞர்கள் உருவாக்குகின்றனர். அக்காலக்கட்டத்தில் மகா பாம்பா உருவத்தைத் தயாரிப்பதற்கும் பன்னிரண்டாயிரம் ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை இலவசமாக வழங்கவும், உணவு மற்றும் உறைவிட வசதியுடன், மஹா பாம்பாவின் உருவத்தை உருவாக்க மூங்கில் மற்றும் துணிகளை வழங்கவும் மன்னர் உத்தரவிட்டார் என்று பண்டைய நாளேடுகள் கூறுகின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியிலிருந்து வந்த கைவினைஞர்களால் இந்த உருவத்தை உருவாக்கும் செயல்முறை ஒரு நல்ல நேரத்தில் தொடங்கப்படுகிறது. இந்தக் கடமை தலைமுறை தலைமுறையாக இரத்தினபுரியில் நிவிடிகலாவுக்கு அருகிலுள்ள கொழும்பகாமா என்ற கிராமத்தில் உள்ள கோலக்கார பரம்பரையினருக்கு உரியதாகக் காணப்படுகின்றது. மகா பாம்பாவை உருவாக்கவும், பாரம்பரியத்தை நிலைநாட்டவும் அவர்களுக்கு ராஜா 'நிலதானம்' வழங்கியுள்ளார். தற்போது இப்பரம்பரையிலிருந்து லால்செரசிங்க மற்றும் அவரது உதவியாளர் டபிள்யூ. என். நிஹால் ஆகியோர் தயாரிக்கின்றனர். இவர்கள் சமன் தேவாலாய போட்டியில் 12 ஆண்டுகள் பங்கேற்று உள்ளனர்.

சமன் தேவாலயத்தில் இடம்பெறுவது போன்று செப்டெம்பர் மாதம் பெரஹரா தெரணியகல சுமண சமன் தேவாலயத்திலும் கொண்டாடப்படுகின்றது. மகா பாம்பா கோலம் இங்கும் வைக்கப்படுகின்றது. எனினும் ஒப்பீட்டளவில் இவற்றுக்கிடையில் சில மாறுபட்ட விடயங்களையும் நடைமுறைகளையும் அவதானிக்க முடியும். முகமூடி ஆட்டத்தைப் பார்ப்பதன் மூலம் பல துன்பங்கள் நீங்குவதாகவும் தமது தீய வினைகள் நீங்குவதாகவும் மக்கள் நம்புகின்றனர். ஐந்து தலை நாகம், முத்தலை நாகம் கொண்ட முகமூடி அணிந்து நடனத்தில் ஈடுபடுகின்றனர்.

### 6. பத்தினி தெய்வ வழிபாடும் நாக வழிபாடும்

இலங்கையில் கஜபாகு மன்னனால் கொண்டுவரப்பட்ட பத்தினி தெய்வ (கண்ணகி வழிபாடு) வழிபாடு சமன் தேவாலயத்திலும் இடம்பெறுகின்றது. இங்கு சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் தமது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.

சமன் தேவாலயத்தில் கருங்கல்லிலான நாகசிலையொன்று காணப்படுகின்றது. இச்சிலையானது ஆலய வெளிவளாகத்தில் சிறிய கட்டுமான பகுதியின் மதில் மேல் வைக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் இக்கட்டுமானத்தில் விநாயகர் வழிபாடு காணப்பட்டதாக மக்கள் தெரிவித்தபோதும் அதற்கான ஆதாரங்கள் தற்போது இல்லை. இருப்பினும் நாகர் சிலை அங்கு காணப்படுவதன் மூலம் புராதன நாக வழிபாடு நிலவியிருந்தது எனக் கருதலாம்.

### முடிவுரை

பௌத்தம் இலங்கையில் அறிமுகமாவற்கு முன்னர் இலங்கையர் பல்வேறு சமய வழிபாடுகளைப் பேணினர். பிராமிச் சாசனங்களில் சிவ, விசாக, குபேர, கண்ணன் முதலான ஏராளமான கடவுளரின் பெயர்கள் தனிநபர் பெயர்களுடன் இணைந்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். அத்தகைய புராதன வழிபாடுகளுள் ஒன்றான சமனுக்குரிய தலமாக சபரகமுவ மகா சமனாலயம் அமைந்துள்ளது. பௌத்த மக்கள் செறிந்து வாழ்கின்ற இப்பிரதேசத்தில் பௌத்தத்துடன் இணைந்தவகையில் இங்கும் வழிபாடுகள் நடைபெறுகின்றமை சிறப்பானதாகும். எனினும் கப்புறாளையால் பூசை செய்யப்படுகின்றமை, ஆறு காலப் பூசை, மங்கல வாத்தியங்களுடன் தெய்வத்தை துயிலெழுப்புதல் முதலான பௌத்தத்திலிருந்து மாறுபட்ட தனித்துவமான சில வழிபாடுகளும் இங்கு நிகழ்த்தப்படுகின்றன. இவை இந்து சமயத்தின் அம்சங்களையே வெளிப்படுத்துகின்றது. எனினும் இலங்கையில் சமன் வழிபாடு தனித்துவமானதும், புராதனமானதும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**References**

Abeyawardana, H.A.P. (2002). *Heritage of Sabaragamuwa.* Ratnapura: Sabaragamuwa Development.

Krishnarajah, S. (2012). *Ilankai Panpaaddu parinamaththin Adippadaikal: AD 1500*. A.B. Creater.

Malathi, A. (2006). *Sumana Saman Theviyo*. Ariya Publication.

Seneviratne, S. (1985). *Social Base of Early Buddhism in south East India and Sri Lanka: 3rd Century B.C.-3rd Century A.D* [Unpublished Doctoral dissertation]. Department of History, Jawaharlal Nehru University.

Sitrambalam, S. K. (1996). *Izaththu inthu samaya Varalaaru- (Part-I-AD 50)*. Thirunelveli: Jaffna University.

Vijerathna, J. (2003). *Sabragamuwa Maha Saman Devalayaya and Ratnapura Sesu Dewala*. Sarasavi Publication.

Wilhelm Geiger (E.d). (1986). *THE MAHAVAMSA*. New Delhi: Asian Educationa Services.